# மருத்துவர் பற்றிய சிந்தனைகள்

மருத்துவர்களுக்குச் சமூகத்தில் அன்று முதல் இன்றுவரையில் எல்லாக் காலங்களிலும் பெருமதிப்பே இருந்து வந்துள்ளது. இறைவனுக்கு அடுத்தபடியாக குருதான் முதன்மை வாய்ந்தவராக இருப்பார் என்று சங்க கால இலக்கியங்கள் கூறினாலும், சமூக நோக்கில் அவ்விடத்தை மருத்துவர்களே பெற்றுள்ளார்கள். ஏனென்றால், சாகப்போகும் உயிரை மீட்டுத்தரும் வல்லவராக மருத்துவர்கள் கருதப்பட்டதினால் அந்த நற்பெயரை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

**மருத்துவரின் தொழிலைப் பற்றி கலித்தொகையில் கூறியது என்னவென்றால்,**

**“திருந்திய யாக்கையுண் மருத்துவ னூட்டிய**
**மருந்து போல”**

என மருத்துவர்கள் தரும் மருத்துவத்தின் மேன்மை பெரிதாகப் பேசப்படுகிறது. அதேபோல மருத்துவரின் நேர்மை – கண்ணியம் போன்றவைகள் தவறு இருந்தால் அவர்களை கண்டிக்கும் போக்கை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்.

மருத்துவர்கள் ஒரு நோயாளியின் நோயின் தன்மையை அறிந்து கொண்டு அதற்குரிய தக்க மருத்துவத்தை அளிக்காமல் அந்த நோயாளிக்கு சிகிச்சை அளிக்காமலும் அல்லது வேறுவிதமான சிகிச்சை அளிப்பதும் நோயாளியை புறக்கணிப்பதும் மிகக் கொடிய பாவச் செயல் என்றும், கொடுஞ்செயல் என்றும் கலித்தொகையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

நோயாளியிடம் எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல் நல்ல மருத்துவத்தை அனைவருக்கும் அளிப்பதே நல்ல மருத்துவரின் கடமையாகும்